அரியர்ஸைக் கொடுக்காமல் தகராறு செய்யும் நிலையிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைக் கொடுக்க வைப்பதற்கு இப்பொழுதாவது ஆர்பிட்டரேஷன் தீர்ப்பை முதலாளிக்கு பைண்டிங்என்ற முறையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை நடவடிக்கைக்குக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, மேற்சொன்ன தீர்ப்பை உடனடியாக நடைமுறை செய்யாவிடில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வழங்கும், நவம்பர் மாதத்திற்கான ஊதியத்துடன் 1—10—1978 முதல் கொடுக்க வேண்டிய நிலுவை பாக்கியை (அரியர்ஸ்) சேர்த்துக் கொடுக்காவிடில் 11—12—1978 முதல் கால வரையின்றி வேலை நிறுத்தம் செய்வதென சில தொழிற் சங்கங்கள் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து சிமெண்ட் நிறுவனங்களுக்கு அறிக்கை விடுத்தது. ஆனால் மேற்கண்ட வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. மேற்கொண்டு எழும் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்த வேலைகள்.

* வினா எண். 553— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைளிப்பாரா:

(அ) பொதுப்பணித்துறை-நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்த வேலைகள் கண்காணிக்க தாலூகா மட்டத்தில் அரசு குழு ஏதேனும் நியமித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) அரசு 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தாலூகா அளவிலான முன்னேறற ஆலோசனைக் குழுக்களை ஏறபடுத்த உத்தரவிட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையிலும், நெடுஞ்சாலை-ஊரகப் பணித் துறையிலும் வேலைகளின் முன்னேற்றத்தையும் தரத்தையும் ஆராயும். எங்கெங்கு தகுந்த தடுப்பு, நிவாரணவேலைகள் தேவைப்படுமோ அங்கங்கு அவை செயல்படும்

1979 மார்ச் 27]

இது சம்பந்தமாக தாலுகா அளவிலாள ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்துமாறு நெடுஞ்சாலைத் துறையின் களப்பணி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதைத்தவிர வேறு எந்த ஆலோசனைக் குழுவும் நெஞ்சாலைத் துறையில் அரசால் நியமிக்கப்படவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அளவிலே அமைக்கப்பட்டுள்ள அந்த ஆலோசனைக் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டுமென்று வரையறுக்கப்பட்டது. அது அரசியல் கட்சிகளின் சார்பாக அமைக்கப்படுகிறதா, அல்லது தனிப்பட்ட முறையிலே அமைக்கப் படுகிறதா என்பதைத் தெரிவிப்பீர்களா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, அந்த வேலைகள் முன்னேற்ற ஆலோசனைக் குழுக்கள் ,அரசியல் கட்சிகள் என்ற அடிப்படை யிலே உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. அதனுடைய தலைவ ராக கோட்ட ஆட்சியர் இருந்து கொண்டிருக்கிறார். தொகுதி யினுடைய சட்டமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினரும் ஆக இருவர் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படுகிறார் கள். அந்தப் பகுதியினுடைய மக்கள் இருவர் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். அது தவிர, தாலுகா வுக்குரிய கோட்ட உதவிப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), தாலுக்காவுக்குரிய கோட்ட உதவிப்பொறியாளர் (நெடுஞ்சாலைப் பணித் துறை), ஆக அதிலே ஒவ்வொருவராக, மொத்தம் 7 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அரசியல் கட்சிகளுக்கு உறுப் பினர்கள் தருவது என்கின்ற அடிப்படையிலே அந்த ஆலோசனைக் குழு போடப்படவில்லை. 27—12—1977 தேதியிடப்பட்ட, 1929 என்ற எண்ணிலே, இதற்கான ஆணை போடப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே எல்லா தாலுகா மட்டங்களிலும் அந்தக் குழு அமைக்கப்பட்டதா? ......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள் கேட்ட கேள் விக்கு நான் வேறு இடத்திலே ஒரு தகவல் இருப்பதை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு கேள்விக்குச் சென்றுவிட்ட பிறகு நீங்கள் பதில் சொல்லக்கூடாது. விதி 82-ன் கீழோ, அல்லது பிறகோ அதற்கான விளக்கம் சொல்ல லாம்.

[1979 மார்ச் 27

திரு. கு. ரமணி : அவர் சொன்னதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி, அமைச்சர் தனியாகப் பதில் கொடுக்கும்போதோ, அல்லது ஸ்டேட்மெண்ட் கொடுக்கும் போதோ கேட்கலாம்.

திரு. கு. ரமணி : ஒரு பிரச்னையின் பேரிலே, (குறுக்கீடு) உங்களுக்காகத் தான் நான் கேட்கிறேன். நாங்கள் கேள்வி கேட்கிற காலத்தில், அதற்குள் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். 1. Within the frame work of the question the Ministers should answer. That is their responsibility.

அதை நீங்கள் கண்காணிக்காவிட்டால், நாங்கள் என்ன செய்யமுடியும்? 2. We are under your protection.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் அதை இப்பொழுது சொல்ல இருந்தார்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் தகவல், வேறிடத்தில் சேகரித்திருக்கிறேன். அதைச் சொல்வதற்குத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் நான் இப்பொழுதே சொல்லி விடுகிறேன்.

11—1—1978 அன்றும், 12—1—1978 அன்றும் பெங்களூரில் தென் மாநிலங்கள் சம்பந்தப்பட்ட கூட்டம் ஒன்று நடந்தது. அப்பொழுது சேலம் மாவட்ட சங்கரியில் உள்ள இண்டியா சிமெண்ட், மற்றும் கோவை மாவட்ட மதுக்கரையில் உள்ள ஏ.சி.சி. சிமெண்ட், அந்த இரண்டு தொழிற்சாலைகளின் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களைக் குழு முன் வைத்ததாகத் தகவல் அறிவிக்கப்பட்டது.

திரு. சி. ஆறுமுகம் : எல்லோருக்கும் ஒரு நியாயமாக இருக்கவேண்டும், மந்திரிக்கு ஒரு நியாயமாக இருக்கக்கூடாது.

1979 மார்ச் 27]

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுக்கள் எல்லாம் தாலுகாமட்டங்களிலே அமைக்கப்பட்டுள்ளதா ? இந்தக் குழுக்கள் எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கு ஏதாவது கைட்லைன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? எத்தனை மாதங்களுக்கு ஒரு முறை குழு கூடுகிறது ? எத்தனை பேர்கள் அதில் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. ப.கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் யார் யார் என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். இந்தக் குழுவினுடைய முக்கிய நோக்கம் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை வேலைகளை நிறைவேற்றுவதற்காக விடுக்கப்படும் ஒப்பந்தங்கள் வழங்குதலில் முறைகேடுகள் இருந்ததாக அரசுக்கு தகவல் வந்தமையால், இவைகளை முறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் மக்கள் தத்தம் பகுதிகளில் செயல் படுத்தப்படும் வேலைகளின் முன்னேற்றம், தரம் மற்றும் அரசின் பணம் அவ்வேலைகளுக்கு முறையான வகையில் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவே இந்தக் குழுவை அரசு நியமித்தது. பல்வேறு இடங்களில் இக் குழு ஏற்படுத்தப்பட விருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் தாலுக்காவில் இது நாள் வரையிலும் இந்த உயர் மட்டக் குழு கூட்டத்தை, ஒரு நாள் கூட கூட்டப்படவில்லை. இரண்டு ஆண்டு காலமாக இந்த நிலைமையில் இருந்தால் பொதுப் பணித் துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும், வருகிற ஒப்பந்தங்களில் முறைகேடுகள் நடந்திருக்கின்றனவா இல்லையா என்பதை எப்படி நாம் நிர்ணயிக்க சாத்தியம்என்றும், திருவள்ளூர் தாலுக்காவில் இது நாள் வரையிலும் ஒரு கூட்டம் கூட கூட்டப்பட வில்லை என்பதை இந்த அரசு அறியுமா என்று கேட்க விரும்புகிறேன் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே. இது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. விசாரித்துத் தெரிவிக்கிறேன்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆரம்பித்த காலத்தில் இரண்டொரு கூட்டங்களை கூட்டியதே தவிர தொடர்ாக கூட்டங்கள் கூட்டப்

படவில்லை. அப்படி கூட்டப்பட்ட கூட்டத்திலும் வேண்டுமென்றே சட்ட மன்ற உறுப்பினர் இல்லாத காலத்தில் கூட்டப்பட்டிருக்கிறது. அதனால் இதை கட்டாயமாக மாதம் ஒரு முறை, அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்ட வேண்டும் என்ற முறையில் அரசு ஆணை இடுமா என்று அறிய விரும்புகிறேன் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இப்பொழுது போடப்பட்டிருக்கிற இந்தக் குழு ஆலோசனைச் குழுவா, அல்லது கண்காணிப்புக் குழுவா ? இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. கண்காணிப்பு குழு என்றால் இதுவரையில் என்ன நடவடிக்கைகள் யார் மீது எடுக்கப்பட்டிருக்கின்றன ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆலோசனைக் குழு தானே தவிர கண்காணிப்புக் குழு அல்ல. ஆலோசனைகள் அரசுக்கு சொல்வதற்காகவே தான் நியமிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 554....

திரு. நா. சுந்தரராஜ், திரு. சி. ஆறுமுகம், திரு. துரை முத்துசாமி எழுந்து நின்றனர்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் அதெல்லாம் இல்லை....

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் குழு கண்காணிப்புக் குழு என்று கேள்வியிலேயே போட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் ஆலோசனைக் குழு என்று சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதைப் பற்றி எழுதி வேண்டுமானால் கொடுங்கள்—தவறான தகவல் தரப்பட்டது என்று. கேள்வி நேரத்தில் இதெல்லாம் வேண்டாம்..